## ஆய்வுச் சுருக்கம்:

## Abstract of the Dissertation:

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணிப் பாடநெறியின் பகுதித் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் "வெல்லாவெளிக் கோட்ட அதிகஸ்ரப் பிரதேச பாடசாலை மாணவர்களின் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை அடைவை மேம்படுத்தல்" எனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கல்வித் தரத்தில் குறைந்த அடைவு மட்டத்திற்கான காரணம் மிகவும் குறைவான செய்முறை கடும் தூரமான பரீட்சையும் ஆகும். எதிர்பார்க்கப்படும் அடைவை பெறாத பிள்ளைகள் குறை அடைவு மட்டம் உள்ள பிள்ளைகளாகக் கருதப்படுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பட்டிருப்புக் கல்வி வலயத்தில் படுவான்கரைப் பகுதியைச் சேர்ந்த கஸ்ர, அதிகஸ்ரப் பிரதேச பாடசாலைகளில் தரம் 5ல் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் குறைந்த பெறுபேற்றைப் பெற்று வருகின்றனர். ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக பாடசாலைச் சூழலும், வீட்டுச் சூழலும் எந்தளவு அக்கறை காட்டுகின்றது என்பது ஆய்வு செய்யப்படவேண்டிய விடயமாகின்றது.

முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக் கற்கைகளின் கருத்துப்படி சமூக பொருளாதார காரணிகளுடன் வீட்டுக் காரணிகள், பாடசாலைக் காரணிகளால் மாணவர்களது அடைவு மட்டம் பாதிப்படைவதாகவும் பரீட்சைகளில் பின்தங்கி இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது ஒரு ஒப்பீட்டு ஆய்வு வடிவமாக அமைந்துள்ளது நகர்ப்புறப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சை அடைவுகளில் தாக்கம் செலுத்துகின்ற வீட்டுக் காரணிகளினதும், பாடசாலைக் காரணிகளினதும் செல்வாக்கினை, அதிகஸ்ரப் பிரதேச பாடசாலைகளில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சை அடைவுகளில் தாக்கம் செலுத்தும் வீட்டுக் காரணிகளினதும், பாடசாலைக் காரணிகளினதும் செல்வாக்குடன் ஒப்பிட்டு அறிவதை நோக்கமாகக் கொண்டு அமைந்துள்ளது.

இந்த ஆய்வானது தொகை சார்ந்த ஆய்வு அணுகு முறையில் அமைந்து காணப்படுவதுடன் காரண காரிய ஒப்பீட்டு ஆய்வு வடிவத்தினையும் கொண்டுள்ளது. ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை அடைவுகள் எனும் விடையத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற தெரிவு செய்யப்பட்ட பத்துக்காரணங்கள் (சாரா மாறிகள்) அதிகஸ்ரப் பிரதேசத்துடனும் நகர்ப்புறப் பிரதேசத்துடனும் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்படுகின்றது.

இந்த ஆய்வினது இலக்கிய மீளாய்விலே அனுபவ ரீதியான ஆய்வுகளின் ஆய்வு முடிவுகளும் சஞ்சிகைகள், நூல்கள், பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட நேரான எதிரான கருத்துக்களும் இடம் பெறுகின்றன. பரீட்சை அடைவுகளில் செல்வாக்குச் செலுத்தும் வீட்டுக்காரணிகள், பாடசாலைக் காரணிகள் என்பனவற்றில் வீட்டில் வாழும் சூழல், பெற்றோரது அறிவு மட்டம் பெற்றோரின் தொழில் நிலை, பெற்றோரால் கல்விக்கான உள்ளீடுகள் வழங்கப்படல் கற்றலுக்கு துணை செய்யும் சேவைகள், ஆசிரியர்களின் கற்பித்தல் பாணி, ஐந்தாம் தரத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களின் சேவைக்காலம், வாசிப்பதற்கான வாய்ப்புக்கள், அதிபரின் தலைமைத்துவம், கற்றலுக்கு துணை செய்யும் சேவைகள் எனும் மாறிகளின்

[illegible] மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வானது அதிகஸ்ரப்பிரதேச பாடசாலைகள் பதினைந்தையும் நகர்ப்புற பாடசாலைகள் முப்பத்தொன்றையும் ஆய்வுக்கான குடித் தொகையாகக் கொண்டுள்ளதுடன் நகர்ப்புறத்தில் இருந்து மூன்று பாடசாலைகளும் அதிகஸ்ரப் பிரதேசத்தில் இருந்து மூன்று பாடசாலைளும் என மொத்தம் ஆறு (06) பாடசாலைகள் எழுமாற்று மாதிரிகளாக கொண்டுள்ளது. அத்துடன் அதிகஸ்ரப் பிரதேசத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இருந்து ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறாத ஐம்பது (50) மாணவர்களும் நகர்ப்புற பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற ஐம்பது (50) மாணவர்களும் ஆய்வுக்கான மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் நகர்ப்புறத்திலும் அதிகஸ்ரப் பிரதேசத்திலும் இருந்து (06) ஆறு அதிபர்கள் (06) ஆறு ஆசிரியர்கள் (06) ஆறு பெற்றோர்கள் என மொத்தம் 18 பேர் நேர்காணலுக்காகத் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட 100 (நூறு) மாணவர்களுக்கும் வினாக்கொத்து வழங்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

சேகரிக்கப்பட்ட தகவல்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு சதவீத அடிப்படையில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் தகவல்களினூடாக பெறப்பட்ட முடிவுகள் நகர்ப்புற பாடசாலைகளுடனும் அதிகஸ்ரப் பிரதேச பாடசாலைகளுடனும் ஒப்பிடப்பட்டு பொருத்தமான விமர்சனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஆய்வின் மூலம் பெறப்பட்ட அனுமானங்கள், ஏனைய ஆய்வாளர்களின் ஆய்வுகளுடன் ஒப்பிடப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்பட்டது அத்துடன் பெற்றோர், பாடசாலை, சமூகம் போன்றவற்றிற்கான ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளது. அந்த வகையில், அதிகஸ்ரப் பிரதேச பாடசாலைகளில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை அடைவுகளை மேம்படுத்த வேண்டுமெனில் நகர்ப்புற பாடசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற பிரத்தியேக வகுப்பு வைத்தல், 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி நூல்களைப் பெற்றுக் கொடுத்தல், நண்பர்களுடன் சேர்ந்து படித்தல், சந்தேகம் தீர்த்தல், கற்றலுக்குச் செலவு செய்தல், நூலகங்களைப் பயன்படுத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது பிரதான பணியாகக் காணப்படுகின்றது.

ஆய்வின் முடிவிலே அதிகஸ்ரப்பிரதேச பாடசாலை மாணவர்களது ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை அடைவுகளை மேம்படுத்த பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், வலயக் கல்விப் பணிமனை, அரசு என்பன மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

ஒரு மாணவனது பரீட்சை அடைவுக்கு அவனது வீட்டுச் சூழலும் பாடசாலைச் சூழலும் அவற்றின் செயற்பாடுகளும் பொருத்தமானவைகளாகத் திகழ வேண்டும் அப்பொழுதுதான் அவனால் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று தனது ஆற்றலை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.